<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் நாள் (28.08.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் ஜுலை–2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **641, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மூஞ்சிக்கல் பகுதியில் அமைந்துள்ள இரும்பு பெட்டிக் கடையின் வாடகை மறு சீராய்வு செய்யப்பட்டதை எதிர்த்து 1)திரு.M.K.அப்துல் காதர் ஜெய்லானி, 2)N.K.சுல்தான். 3)S.ராஜாமுகமது, 4)N.K.மீர் ஆகியோரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP.(MD)No.16130, 16139, 16143, 16146 / 2019ன் மூலம் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பாக ஆஜரான வகையில் வழக்கறிஞர் கட்டணமாக ஒரு வழக்கிற்கு ரூ.7,500/– வீதம் நான்கு வழக்குகளுக்கு ரூ.30,000/– வழங்கக் கோரி நகராட்சி (நிலை) வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்கள் பட்டியல் சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **642, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.2045/2019/பி3 நாள்.16.7.2019 மற்றும் 6.8.2019,மாவட்ட ஆட்சித்தலைவர் திண்டுக்கல் அவர்களின் கடிதம் 188/2019/அ5 நாள்.6.8.2019 ஆகிய கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் அறிவுறுத்தியுள்ளபடி, கொடைக்கானல் நகராட்சிப்பகுதியில் 1 முதல் 24 வார்டுகளில் உள்ள அனைத்து அரசு கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிடஙகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு குறித்து ஆய்வு பணிகள் மேற்கொண்டு (1) கட்டிடம் அரசு விதியின்படி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது (2)மழைநீர் கட்டமைப்பு கட்டிடம் பழுதடைந்தை சீரமைத்தல் (3) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு புதிதாக ஏற்படுத்துதல் சம்மந்தமான ஸ்டிக்கர்கள் ஒட்டியும், அறிவிப்புகள் சார்பு செய்தும் அதன் விபரத்தினை தினந்தோறும் முன்னேற்ற அறிக்கையாக அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு பணி அரசின் முக்கிய பணி என்பதாலும் , மேற்படி குடிநீர் விநியோகம் தொடர்பான பணிகளில் அரசு தனிக்கவனம் செலுத்திவருவதாலும், இதனை சிறப்பினமாக கருதி கீழ்க்கண்ட விபரப்படியான ஸ்டிக்கர்கள் மற்றும் அறிவிப்புகள் அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு பல்நோக்கு சேவை கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து பெறவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.2,50,000/–ஐ(ரூபாய் இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டிப்படுகிறது.

| வ.எண். | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இந்த கட்டிடம் அரசு விதிகளின்படி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது (ஸ்டிக்கர்கள்) | 12000 |
| 2 | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு புதிதாக ஏற்படுத்துதல் / பழுதடைந்ததை சீரமைத்தல் (அறிவிப்புகள்) | 12000 |

அலுவலக குறிப்பு –1) அரசின் திட்டமான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு திட்டத்தினை செயல்படுத்த அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு பல்நோக்கு சேவை கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து பெற நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2) இதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.2,50,000/–ஐ(ரூபாய் இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் மட்டும்) பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8690/2012/எப்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **643, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ME.1) துறையின், 21.09.2011ம் தேதிய அரசாணை (பல்வகை) எண். 145ன்படி, கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு சிறப்பு நிலை நகராட்சியால் 2019 – 2020 ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகை ரூ. 1,50,000/–ஐ (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலுத்தக் கோரி இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.648/2019/அ2, நாள்.30.07.2019ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட பங்குத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **644, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கவி தியாகராஜர் சாலையில் உள்ள தங்கும் விடுதியில் உள்ள சாதாரண அறைகள் (16 மட்டும்) கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 08.03.2019ம் தேதி மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| குத்தகை இனம் | திருவாளர் | மறு பொது ஏலம் ரூ | மறு ஒப்பந்தப்புள்ளிரூ. | உச்ச கேள்வி / ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|
| கவி தியாகராஜர் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான தங்கும் விடுதியில் உள்ள சாதாரண அறைகள் (16மட்டும்) கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1) திரு.V.குரு, த/பெ.R.வெங்கட சுப்பு, குறிஞ்சி ஆண்டவர் கோவில் தெரு, நாயுடுபுரம், கொடைக்கானல். | 8,64,000 | –– | –– |
| | 2) திரு.P.சுரேஷ், த/பெ.பெருமாள் தேவர், 24/33, லெட்சுமி சுந்தரம் காலனி, திண்டுக்கல். | 8,75,000 | –– | 8,75,000 |
| | 3) திரு.M.ரவி, த/பெ.முத்து தேவர், 41/10F, MR டவர், புது அக்ரஹாரம், கிழக்கு கோவிந்தாபுரம், திண்டுக்கல். | –– | 8,51,000 | 8,51,000 |
| | 4) திரு.R.வெங்கடேஷ், த/பெ.ராதாகிருஷ்ணன், எண்.1, முதல் குறுக்கு தெரு, ஜெய் நகர், மதுரை. | –– | 7,21,000 | –– |
| | 5) திரு.M.சுரேஷ், த/பெ.முத்துராஜா, 24, பிரித்தம் வீதி, துரைசாமி நகர் பைப்பாஸ் ரோடு, மதுரை. | –– | 7,10,000 | –– |

மேற்கண்ட குத்தகை உரிம இனத்திற்கு (1) 25.01.2018, (2) 15.02.2018, (3) 01.03.2018, (4) 15.03.2018, (5) 22.03.2018, (6) 28.03.2018, (7)09.07.2018, (8) 03.08.2018, (9) 13.02.2019, (10) 08.03.2019 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் கோர எவரும் முன் வரவில்லை. இந்நிலையில் மேற்கண்ட குத்தகை உரிமத்திற்கு 08.03.2019ம் தேதியில் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.8,75,000/–க்கு திரு.P.சுரேஷ், த/பெ. பெருமாள் தேவர், திண்டுக்கல் என்பவர் கேட்டுள்ளார். மேற்கண்ட தங்கும் விடுதியை பல முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலத்தில் கலந்து கொள்ளாத நிலையில் ஒரு வருட காலம் வருவாய் ஈட்ட வழிவகை இல்லாமல் இருந்த நிலையிலும் தற்போது மேற்கண்ட உயர்ந்த கேள்வி கேட்கப்பட்டுள்ளது. இந்த தொகை கடந்த மூன்றாண்டு குத்தகை உரிம தொகை சராசரியை விட கூடுதலாகவும் இதற்கு முந்தைய உயர்ந்த ஏலக் கேள்வியை விட கூடுதலாகவும் உள்ளது.

| | | |
|---|---|---|
| 2015–2016 | = | 8,07,500/– |
| 2016–2017 | = | 8,47,875/– |
| 2017–2018 | = | 8,90,269/– |
| | | ––––––– |
| மொத்தம் | = | 25,45,644/– |
| | | ––––––– |
| ரூ.25,45,644 / 3 | = | ரூ.8,48,548/– |

எனவே தற்போதைய அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.8,75,000/– ஐ மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். மேலும், நடை முறையில் உள்ள விதி முறைகளின்படி சேவை வரியாக அன்னாரிடமிருந்து வசூல் செய்து சேவை வரி செலுத்தவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இந்நகராட்சியின் வருவாய் இனத்தின் நிர்வாக நலன் கருதி கூடுதல் ஆண்டு குத்தகை கோரிய திரு.P.சுரேஷ் என்பவருக்கு 01.09.2019 முதல் மூன்றாண்டுகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகைக்கு விட்டுவிட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4413/14/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **645, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கோக்கர்ஸ்வாக் பகுதியில் அமைந்துள்ள தொலைநோக்கி இல்லம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பெறுவதற்காக இந்நகராட்சியில் 01.08.2019ஆம் தேதியன்று மறு பொது ஒப்பந்தப்புள்ளி / மறு பொது ஏலம் கோரியதில் கீழ்கண்டவாறு பொது ஏலம் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் | பொது ஏலம் கோரியது தொகை ரூ. | பொது ஒப்பந்தப்புள்ளி கோரியது தொகை ரூ. | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.S.செபாஸ்டின் தேவராஜ், உட்காட் காம்பவுண்டு, கொடைக்கானல். | 347000 | –– | 347000 |
| 2 | திரு.S.அபுபக்கர் சித்திக், ஆனந்தகிரி 7வது தெரு, கொடைக்கானல். | 331000 | –– | –– |
| 3 | திரு.R.டேனியல் மனோகரன், பாம்பார்புரம், கொடைக்கானல். | 345000 | –– | –– |

மேற்கண்ட குத்தகை இனத்தில் உயர்ந்த பட்ச ஏல கேள்வி தொகை ரூ.347000/–யினை திரு.S.செபாஸ்டின் தேவராஜ் என்பவர் கோரியுள்ளார். சென்ற ஆண்டு 2018–19ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.283379/–விட நடப்பு ஆண்டு 2019–20ஆம் ஆண்டிற்கு கூடுதலாக நகராட்சி வருவாய் ஈட்டப்படுவதால் இக்குத்தகை இனம் (2019–20, 2020–21, 2021–22) 01.09.2019 முதல் 31.08.2020 மூன்று ஆண்டு குத்தகை உரிமத்தை திரு.S.செபாஸ்டின் தேவராஜ் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியை ஏற்று அன்னாருக்கே குத்தகை உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **646, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட இடஙகளில் E-Toilet நகராட்சியால் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்தது.

1. மூஞ்சிக்கல் சந்திப்பு
2. பிரையண்ட் பூஙகா

இதில் மூஞ்சிக்கல் பகுதியில் நெடுஞ்சாலைத் துறையினரால் ஆக்கிரமிப்பு அகற்றும்போது அப்பகுதியில் இருந்த E-Toilet அகற்றப்பட்டுள்ளது. மேலும், பிரையண்ட் பூஙகா பகுதியில் இ டாய்லெட் பயன்பாடு அதிகமாக உள்ளதால் அதன் வடிவமைப்பு போதுமானதாக இல்லை. எனவே, மேற்கண்ட இரண்டு E-Toilet களையும் கீழ்க்கண்ட இடஙகளில் மாற்றி அமைத்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவர கீழ்க்கண்டவாறு பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | மூஞ்சிக்கல் பகுதியில் உள்ள E-Toilet அகற்றி கோக்கர்ஸ் வாக் பகுதியில் நிருவுதல் | 4.80 |
| 2. | பிரையண்ட் பூஙகா பகுதியில் உள்ள E-Toilet அகற்றி கவி தியாகராஜர் சாலையில் நிருவுதல் | 4.80 |

தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **647, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான செனமேரிஸ் சாலையில் உள்ள ஆணையர் குடியிருப்பிற்கு எர்த் வயரிங இல்லாததால் புதியதாக எர்த் வயரிங செய்தவகையில் செலவினத் தொகை ரூ. 1200/– யை இந்நகராட்சி மின் கம்பியாளர் திரு என். ரசல்ராஜேந்திரன் அவர்களால் வழஙகப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட செலவினத் தொகையினை அன்னாருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **648, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள மாவு அரைக்கும் இயந்திரத்தின் மின் மோட்டார் பழுதடைந்து இருந்ததால், இவ்வியந்திரத்தின் மோட்டார் பழுதினை சீரமைத்து பொருத்தியவகையில் செலவினம் தொகை ரூ. 6500/– அவசர அவசியம் கருதி இந்நகராட்சி மின் கம்பியாளர் திரு என். ரசல்ராஜேந்திரன் அவர்களால் வழஙகப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட செலவினத் தொகையினை அன்னாருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.      அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **649, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வெள்ளி நீர் வீழ்ச்சி பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 630 நாள். 26.6.2019 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியை மேற்கொள்வதற்கு 09.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வெள்ளி நீர் வீழ்ச்சி மற்றும் பூஙகாவை மேம்படுத்துதல் | 9.50 | மெசர்ஸ். சரவணா இன்ஜினியரிங ஒர்க்ஸ்<br>திருமதி என். சரஸ்வதி | 0.31% குறைவு<br>0.51% அதிகம் |
| 2 | வெள்ளி நீர் வீழ்ச்சி பூஙகாவின் அழகு தோற்றம் மற்றும் பூந்தோட்டம் அமைத்தல் | 6.50 | மெசர்ஸ். சரவணா இன்ஜினியரிங ஒர்க்ஸ்<br>திருமதி என். சரஸ்வதி | 0.19% குறைவு<br>0.35% அதிகம் |
| 3 | வெள்ளி நீர் வீழ்ச்சியில் அலஙகார மின் விளக்குகள் மற்றும் வர்ணம் பூசுதல் | 10.00 | மெசர்ஸ். சரவணா இன்ஜினியரிங ஒர்க்ஸ்<br>திருமதி என். சரஸ்வதி | 0.15% குறைவு<br>0.16% அதிகம் |

அலுவலக குறிப்பு.      வரிசை எண். 1 முதல் 3 வரை உள்ள பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **650, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறையால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (பொது) கட்டிடஙகளில் கண்காணிப்பு கேமரா பொருத்துதல் விதிகள் 2012–ன் படி திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து அரசு அலுவலகஙகளிலும் கண்காணிப்பு கேமரா (CCTV) உடனடியாக பொருத்தப்பட வேண்டும் என அரசு முதன்மை செயலாளர் (மு.கூ.பொ), பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு–பி) துறை கடிதம் எண். 8476/ச(ம)ஓ.பி..2018–2 நாள். 12.11.2018 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின்படி இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடஙகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட வேண்டியுள்ளது.

1. கோக்கர்ஸ் வாக்
2. நகராட்சி படகு குழாம்
3. அம்மா உணவகம்
4. ஜிம்கானா கிணறுகள்
5. நகராட்சி அலுவலக வெளிப்புற பகுதி
6. நகராட்சி சிறுவர் பூஙகா

எனவே, மேற்கண்ட இடஙகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட மதிப்பீடு ரூ. 7.10 இலட்சத்திற்கு ( ரூபாய் ஏழு இலட்சத்து பத்தாயிரம் மட்டும் ) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு இப்பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **651, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கார்மேல்புரம் பகுதியில் சிமிண்ட் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்திட நகர்மன்றத் தீர்மானம் எண். 626 நாள். 26.6.2019 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியை மேற்கொள்வதற்கு 09.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கார்மேல்புரம் பகுதியில் சிமிண்ட் சாலை மற்றும் சிறு பாலம் அமைத்தல் | 10.00 | திருமதி என். சரஸ்வதி<br>திரு ஜி.சிவக்குமார் | 0.36% குறைவு<br>1.55% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி என்.சரஸ்வதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **652, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **ஏற்கப்படுகிறது.** |

*******

13) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான லாயிட்ஸ் சாலையில் உள்ள திறந்தவெளி கிணற்றில் பழுதுடைந்துள்ள மின் மோட்டாரினை மாற்றி புதிய மோட்டார் மற்றும் உதிரி பொருட்கள் மாற்றுதல் பணியினை மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண். 623 நாள். 26.6.2019 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியை மேற்கொள்வதற்கு 09.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | லாயிட்ஸ் சாலையில் உள்ள திறந்தவெளி கிணற்றில் பழுதுடைந்துள்ள மின் மோட்டாரினை மாற்றி புதிய மோட்டார் மற்றும் உதிரி பொருட்கள் மாற்றுதல் | 1.38 | திரு எம்.கென்னடி<br>திரு பி. சுப்பிரமணி | 0.07% குறைவு<br>0.19% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.கென்னடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **653, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக்குறிப்பு ஏற்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு டி, பிளாக் 19, நகளரவு எண. 2–1 ல் மூலதன மானிய நிதியின் கீழ் நவீன எரிவாயு தகனமேடை கட்டும்பணி நடைபெற்று வருகிறது. இப்பணி நடைபெறும் இடத்தின் மேல் தாழ்வாக உயர்மின் அழுத்த கம்பி வடம் செல்வதினால் கட்டுமானப் பணிக்கு இடையூறாகவும், பாதுகாப்பின்றியும் அமைந்துள்ளது. எனவே, இந்த உயர் மின்னழுத்த கம்பி வடத்தினை மாற்றிட தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால்

தொகை ரூ.67980/— (ரூபாய் அறுபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து என்பது மட்டும்) செலுத்திட கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: கட்டுமானப் பணியினை விரைந்து முடித்திடும் பொருட்டும், பாதுகாப்பு கருதியும் மேற்கண்ட செலவினத்தினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு ந.க.எண். 2136/2017/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **654, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

15) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ ஈப்பு TN 57 Y 5392 ன் வாட்டர் பம்ப் பழுதுடைந்துள்ளதை சரி செய்த வகையில் பட்டியல் தொகை ரூ. 3,365/— யை இந்நகராட்சி ஓட்டுநர் திரு ஒய். மைக்கிள் டேவிட் அவர்களால் வழுங்கப்பட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட செலவினத் தொகையினை அன்னாருக்கு வழுங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **655, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

16) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான TN57 AY 5392 பொலிரோ வாகனத்தின் நான்கு டயர்கள் கடந்த 08.9.2017ம் தேதியன்று வாஙகப்பட்டுள்ளது. இந்த டயர்கள் மாற்றப்பட்டு இதுநாள்வரை 45,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. மேற்கொண்டு இந்த டயர்களை கொண்டு வாகனத்தினை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, இவ்வானத்திற்கு புதிய நான்கு டயர்கள் MRF நிறுவனம் திண்டுக்கல்லில் வாங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 23,000/— ( ரூபாய் இருபத்து மூன்றாயிரம் மட்டும் ) ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (கோப்பு.ந.க.எண். 5661/2009/இ1)

*******

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **656, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

17) நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.44555/2013/பி.3, நாள்.28.02.2019ன் படியும் 2019 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் 12—ன்படியும் **(No,of 2019 The Tamil Nadu Municipal Laws (Second Amendment) Act 2019 Published in Tamil Nadu Government Gazette Extraordinary No. 75 dt. 21.02.2019**) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.84 நாள்.26.06.2018ன்படியும் தமிழக நகராட்சி பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட **(Use and throwaway plastics**) நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், பகிர்ந்தளித்தல் , விற்பனை செய்தல் பயன்படுத்துதல் ஆகியவற்றை தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரத்திற்கு கொடைக்கானல் நகராட்சி பகுதியில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்ட **(Use and throwaway plastics)** மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், பகிர்ந்தளித்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றை தடை செய்தல் குறித்து ஏற்கனவே இயற்றப்பட்ட கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 திண்டுக்கல் மாவட்ட அரசிதழ் எண்.01, நாள்.10.01.2019—இல் வெளியீடு செய்யப்பட்ட துணை விதிகளுக்கு திருத்தங்கள் மேற்கொண்டு உபவிதிகள் இயற்றி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016—ஆம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிக்கான திருத்தங்கள்.

**அட்டவணை—I**

<table>
<tr>
<td>I</td>
<td>3ம் பிரிவிற்கான திருத்தங்கள்</td>
<td>
2016 ஆம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 3ஆம் பிரிவில் (22) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும்.
23. செயலாக்க அதிகாரி, நகராட்சிப் பகுதிகளில் செயலாக்க அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.
24. ஆய்வு நடத்தி தண்டம் வசூல் செய்யும் அதிகாரி ஆணையாளர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.
25. மேல்முறையீட்டு அலுவலர் இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல்முறையீட்டு அலுவலர் நகராட்சி ஆணையாளரே ஆவார்.
26. தண்டனைகள் விதிக்கும் முறைகள்.<br>
இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை மற்றும் இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும்.<br>
நான்காவது முறையாக மீறுபவருக்கு கூடுதல் தொடர் அபராதத்துடன் உடனடியாக குடிநீர் இணைப்பு துண்டித்தல் மற்றும் தொழில்களுக்கான உரிமம் ( D & O ) இரத்து செய்யப்படும்.
27. வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு
I. மொத்தமாக ( Whole Sale)<br>
சேமித்தல் / வழங்குதல் / கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் பகிர்ந்தளித்தல்.
II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலை, பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.
III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் முதலானவைகள்.
IV. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக் கடைகள், இதர சிறிய வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு, அரசு சார்பு நிறுவனங்கள்.
</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>4ம் பிரிவிற்கான திருத்தங்கள்</td>
<td>
2016 ஆம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4ஆம் பிரிவில்
<table>
<tr><th>துணை விதிகள் எண்.</th><th>நீக்கம் செய்யப்படும் துணை விதிகள்</th><th>திருத்தியமைக்கப்பட்ட உபவிதிகள்</th></tr>
<tr>
<td>4(2)</td>
<td>50 மைக்கரான் அடர்த்தி அளவிற்கு குறைவாக அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அடர்த்தி அளவிற்கு குறைவாக உள்ள ஏற்கனவே உபயோகப்படுத்தாத அல்லது மறு சுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய கைப்பைகளை எந்த ஒரு நபரும் தயாரிக்கவோ அல்லது இருப்பு வைக்கவோ, விநியோகிக்கவோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது. மீறினால் பொருட்கள் பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.</td>
<td>பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட (Use and throwaway plastics) நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன. மீறினால் தடை செய்யப்பட்ட பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணை II–ல் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டும்.</td>
</tr>
</table>
</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>6ம் பிரிவிற்கான திருத்தங்கள்</td><td>2016 ஆம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளில் 6ஆம் பிரிவில் பின்வரும் கூறுகள் நீக்கம் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படும் உபவிதிகள்.
<table>
<tr><th>துணை விதிகள் எண்.</th><th>நீக்கம் செய்யப்படும் துணை விதிகள்</th><th>திருத்தியமைக்கப்பட்ட உபவிதிகள்</th></tr>
<tr><td>6(2)</td><td>பொருட்களை 50 மைக்கரானிற்கு மேற்பட்ட கேரி பைகளில் வழங்க தயாராக உள்ள கடைகாரர்கள், தெரு விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் நகராட்சியில் வருடத்திற்கு ரூ.48,000/– (மாதம் ரூபாய் 4,000/–) பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும். ஆண்டு தோறும் கட்டணம் செலுத்தி பதிவை புதுப்பிக்க வேண்டும்.</td><td>நீக்கம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>6(3)</td><td>நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்கள் பிளாஸ்டிக் கேரிபைகள் வழங்க கட்டணம் வசூலிக்கப்படும் என முக்கிய இடத்தில் காட்டவேண்டும்.</td><td>நீக்கம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>6(4)</td><td>நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட கடைகாரர்கள் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் மட்டுமே கேரிபைகள் வழங்க தகுதி உடையவர்கள் பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரி பைகள், விற்பனை பொருட்கள் வழங்குதல் ஆகியவை தண்டனைகுரிய குற்றம். இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.</td><td>நீக்கம் செய்யப்படுகிறது.</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>7ம் பிரிவிற்கான திருத்தங்கள்</td><td>2016 ஆம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளில் 7ஆம் பிரிவில் பின்வரும் கூறுகள் நீக்கம் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படும் உபவிதிகள்.
<table>
<tr><th>துணை விதிகள் எண்.</th><th>நீக்கம் செய்யப்படும் துணை விதிகள்</th><th>திருத்தியமைக்கப்பட்ட உபவிதிகள்</th></tr>
<tr><td>7(a)</td><td>பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்டு கேரி பைகளில் வழங்க தயாராக உள்ள கடைக்காரர்கள், தெரு விற்பனையாளர்கள் சில்லரை விற்பனையாளர்கள் பதிவு செய்து சான்று வழங்கல்.</td><td>நீக்கம் செய்யப்படுகிறது.</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>8ம் பிரிவிற்கான திருத்தங்கள்</td><td>2016 ஆம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளில் 8ஆம் பிரிவில் பின்வரும் கூறுகள் நீக்கம் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படும் உபவிதிகள்.
<table>
<tr><th>துணை விதிகள் எண்.</th><th>நீக்கம் செய்யப்படும் துணை விதிகள்</th><th>திருத்தியமைக்கப்பட்ட உபவிதிகள்</th></tr>
<tr><td>8(2)</td><td>துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுபடுத்துபவர் அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ள தண்டத் தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன் / அவள்–க்கு எதிராக நகர காவல் சட்டம் மற்றும் மாவட்ட காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.</td><td>8) இந்த திருத்தப்பட்ட துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 90 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை IIன்படி இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.<br><br>8.2) அட்டவணை I,II–ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939–ன்படி ஆணையாளர் அல்லது அவரால் முழுஅதிகாரம் அளிக்கப்பட்ட நகராட்சி அதிகாரி மூலமாக சட்டரீதியான வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>புது</td><td>2016ம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகளில்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அட்டவணை II சேர்த்தல் | அபராத அட்டவணை I–க்கு பின்பு அட்டவணை III சேர்க்கப்படும். |

## அட்டவணை – II

**2016 ஆம் ஆண்டு கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4ஆம் பிரிவில் (2(1)) ஆம் கூறில் தெரிவிக்கப்பட்ட விதிகளை மீறினால் செலுத்த வேண்டிய அபராத தொகை**

| வ. எண் | துணை விதிகள் | குற்றங்கள் | தண்டத் தொகை ரூபாய் | திருத்தியமைக்கப்பட்ட உப விதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூபாய் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூபாய். | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் ரூபாய் |
| 1 | 4(2) | தயாரித்தல் | 5000/– | ரூ.10,000/– | ரூ.15,000/– | ரூ.25,000/– |
| | | இருப்பு வைத்தல் | 4000/– | | | |
| | | விநியோகித்தல் | 2000/– | | | |
| | | விற்பனை செய்தல் | 1000/– | | | |
| 2 | 4(3) (i) | ஒரு முறை பயன்படுத்தப் பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட (Use and Throw away plastics) நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளிக்கும் வணிக நிறுவனங்கள் பல்பொருள் அங்காடிகள் மிகப் பெரிய வணிக நிறுவனங்கள். | பொருள் பறி முதலுடன் ரூ.2000/– | ரூ.5,000/– | ரூ.7,000/– | ரூ.10,000/– |
| | (ii) | ஒரு முறை பயன்படுத்தப் பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட (Use and Throw away plastics) நெகிழியை பயன்படுத்தும், பகிர்ந்தளிக்கும் மளிகை கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்கள். | பொருள் பறி முதலுடன் ரூ.2000/– | ரூ.1000/– | ரூ.2000/– | ரூ.5000/– |
| | (iii) | ஒரு முறை பயன்படுத்தப் பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட (Use and Throw away plastics) நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளிக்கும் சிறிய வணிக நிறுவனங்கள் தனி நபர் பயன்படுத்துதல். | பொருள் பறி முதலுடன் ரூ.2000/– | ரூ.100/– | ரூ.200/– | ரூ.500/– |

அலுவலக குறிப்பு:

1) தமிழக அரசின் ஆணையின்படி சுற்றுச் சூழல் பாதுகாப்பு நலன் கருதி நெகிழிகள் இல்லா தமிழகத்தை உருவாக்க கொடைக்கானல் நகராட்சியிலும் நெகிழிகள் இல்லா நகரமாக்க உரிய உபவிதிகள் உருவாக்கவும் அவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியீடு செய்து நடைமுறை படுத்தவும், மன்றம் அனுமதிக்கலாம்.
2) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தமிழகத்தில் நெகிழிகள் இல்லா மாநிலமாக்க வேண்டியதன் நோக்கத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏற்படும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2180.2019/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **657, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

18) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட சாலைகளை செப்பனிடுவதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 618 நாள். 26.6.2019 ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியை மேற்கொள்வதற்கு 17.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மூஞ்சிக்கல் சந்திப்பு முதல் ஆனந்தகிரி 4வது தெரு நகராட்சி குடியிருப்பு வரை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 9.80 | திரு பி. அரசகுமார்<br>திரு ஜி. சிவக்குமார் | 0.10% குறைவு<br>0.33% அதிகம் |
| 2 | லாஸ்காட் சாலை சந்திப்பு முதல் ஆனந்தகிரி 4வது, 5வது தெரு சந்திப்பு வரை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 10.00 | திரு பி. அரசகுமார்<br>திரு ஜி. சிவக்குமார் | 0.10% குறைவு<br>0.33% அதிகம் |
| 3 | செண்ட் மேரிஸ் சாலை முதல் இருதய ஆண்டவர் கோயில் வரை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 7.50 | திரு பி. அரசகுமார்<br>திரு ஜி. சிவக்குமார் | 0.06% குறைவு<br>0.10% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரிசை எண். 1 முதல் 3 வரை உள்ள பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2) நகர் பகுதியில் நகராட்சி சாலைகள் மிகவும் சேதமடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் உடனடியாக சாலைகளை செப்பனிட வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேலும் இச்சாலைகள் செல்லும் பகுதியானது வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்ற வளாகம், வானொலி நிலையம் , பல்கலைக் கழகம், பள்ளி பகுதிகள் மற்றும் தொலைக்காட்சி நிலையம் அமைந்துள்ள முக்கியமான சாலையாகும். இச்சாலைகளை பொது மக்கள் மற்றும் மாணவ மாணவிகளின் நலன் கருதி அவசர அவசியமாக செப்பனிட வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **658, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அங்கீகரிக்கப்படுகிறது.** |

*******

19) தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கான அலுவல் நிமித்தமான பயணங்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ள பயணப்படிவிதிகள் மற்றும் அரசாணைகளுக்கிணங்க நகராட்சி ஆணையாளர், நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தம் வெளியூர் பயணங்கள் மேற்கொள்வதற்கான பயணப்படிகள் வழங்குவதற்கும், 2019–20–ஆம் ஆண்டுக்கு ஆகும் செலவினம் ரூ.8,00,000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அரசின் பயணப்படி விதிகளுக்கு உட்பட்டு பயணப்படி செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3/2006/பி1).

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **659, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

20) தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கான இடமாற்றம் நிமித்தமாக மேற்கொள்ளப்படும் இடமாற்றத்திற்கான பயணங்களுக்கு பயணப்படி விதிகளின்படி இடமாற்றப் பயணப்படிகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31761/2018/K1இ நாள்.31.02.2019–ன் படி, திரு.பா.குமார்சிங், மேலாளர் அவர்கள் நாகர்கோவில் நகராட்சியிலிருந்து இந்நகராட்சிக்கு பணிமாறுதலில் வந்தமைக்கான பயணப்படி பட்டியலில் (T.T.A.Bill) சமர்ப்பித்துள்ளார். பணியிட மாறுதலுக்கான பயணப்படி பட்டியல் தொகை ரூ.12,380/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அரசின் பயணப்படி விதிகளுக்கு உட்பட்டு பயணப்படி செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3/2006/பி1).

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **660, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

21) கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குற்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள LED தெருவிளக்குகளை 2018–2019ம் ஆண்டு முதல் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட நகர்மன்றத் தீர்மானம் எண். 262 நாள். 30.11.2017 ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் கடிதம் எண். 13899/2016/டி.ஒ.1 நாள். 09.03.2018ல் 1.4.2018 முதல் ஓர் ஆண்டிற்கு மேற்படி தெரு விளக்குகளை பராமரித்திட அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி28.3.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மாருதி டிரேடிங காா்ப்பரேசன், தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தீர்மானம் 356 நாள். 19.4.2018 ல் ஒப்புதல் செய்யப்பட்டு 3.4.2018 முதல் ஒரு வருட காலம் அல்லது ESCO நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் காலம் வரை LED தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மாருதி டிரேடிங காா்ப்பரேசன், தேனி நிறுவனத்திற்கு 19.04.2018 அன்று பணி உத்திரவு வழஙகப்பட்டுள்ளது. தெருவிளக்கு பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், இப்பணியை இதே ஒப்பந்ததாரர் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமைப் பொறியாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் 03.04.2019 முதல் 02.07.2019 வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கு தலைமை பொறியாளரின் பின்னேற்பு பெறவும், இதே ஒப்பந்ததாரர் மூலம் மேலும் ஓராண்டு காலத்திற்கு அல்லது ESCO நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் காலம் வரை இதில் எது முன்னதோ அதுவரை LED தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்து கொள்ள தலைமை பொறியாளரின் அனுமதி பெறவும் நகர்மன்றத் தீர்மானம் எண். 611 நாள். 8.3.2019 ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி காலநீட்டிப்பு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 3416/2016/இ1 நாள். 16.4.2019 ல் பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது நாள்வரை அனுமதி பெறப்படாத நிலையில் உள்ளது.

மேலும், நகர்மன்றத் தீர்மானம் எண். 611 நாள். 8.3.2019 ன்படி ஏற்கனவே, 2.4.2019 முதல் 2.7.2019 வரை ஒப்பந்ததாரருக்கு காலநீட்டிப்பு வழஙகப்பட்டு தற்போது முடிவுறும் நிலையில் உள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் இருந்து காலநீட்டிப்பு அனுமதி வரப் பெறும் வரை LED தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை இதே ஒப்பந்ததாரர் மூலம், பழைய விலை விகிதத்திலேயே பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

கொடைக்கானல் நகரம் இந்தியாவின் முக்கிய சுற்றுலா நகரம் என்பதினால், சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தெருவிளக்குகளை பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பணியாகும். எனவே, உள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் இருந்து காலநீட்டிப்பு அனுமதி வரப் பெறும் வரை LED தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம். (Roc.No.3416/2016/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **661, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

22) கொடைக்கானல் நகராட்சி உட்பட்ட வார் எண். 1 முதல் 24 வரை உள்ள தெருவிளக்குகளை முழுவதுமாக தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்ள முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13899/2016/Do1 நாள். 21.07.2016–ல் அனுமதி அளிக்கப்பட்டு 10.08.2016 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ். மாருதி டிரேடிங காா்ப்பரேசன், தேனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்ற தீர்மானம் எண். 1641 நாள். 29.08.2016–ல் அஙகீகரிக்கப்பட்டு 30.08.2016 அன்று 01.09.2016 முதல் 31.08.2017 வரை இந்நகராட்சி தெரு விளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழஙகப்பட்டுள்ளது. 31.8.2019 உடன் ஒரு வருட காலம் முடிவடைந்ததால் மேலும் ஓராண்டிற்கு நீட்டித்துக்கொள்ள நகர்மன்ற தீர்மானம் 450 நாள். 28.8.2018 ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, 31.8.2019 வரை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது 31.8.2019 உடன் முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு அல்லது ESCO LED விளக்குகள் அமைக்கும் பணி துவக்கும் வரை

தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை இதே ஒப்பந்ததாரர் மூலம், பழைய விலை விகிதத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

கொடைக்கானல் நகரம் இந்தியாவின் முக்கிய சுற்றுலா நகரம் என்பதினால், சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தெருவிளக்குகளை பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பணியாகும். மேலும் ஓராண்டிற்கு அல்லது ESCO LED விளக்குகள் அமைக்கும் பணி துவக்கும் வரை தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **662, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

23) கொடைக்கானல் நகருக்கு வருகை புரிந்த தமிழ்நாடு சட்டமன்ற ஏடுகள் குழுவின் 22.8.2019 ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் ( பொதுப் பணித்துறையின் ஆய்வு மாளிகையில் ) நகர் பகுதியில் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் நகர் பகுதியில் சுற்றுலா சாலைகள் வழிகாட்டி பலகைகள் மற்றும் தகவல் பலகைகள் அமைத்து அதன்விபரத்தினை சட்டமன்ற ஏடுகள் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர் பகுதியில் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் வழிகாட்டி பலகைகள் மற்றும் தகவல் பலகைகள் அமைத்திட மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் ( ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூராயிரம் மட்டும் ) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **663, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

24) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கில் மும்முனை மின் இணைப்பு வழஙகும் பணி மின்சார வாரியத்தினரால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, குப்பை கிடஙகினை சுற்றிலும் மின் கம்பஙகளுடன் மின் விளக்குகள் அமைப்பதற்கும், உரம் தயாரிக்கும் இயந்திரஙகள் பொருத்தும் இடஙகளில் தேவையான பேனல் போர்டு அமைத்திடவும் பொது நிதியின் கீழ் மதிப்பீடு ரூ. 14.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **664, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

25) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பார்க் வியு பஙகளா வளாகத்தில் மின் விளக்கு அமைத்தல், மராமத்து பணி, தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் பூந்தோட்டஙகள் அமைப்பதற்கு பொது நிதியின் கீழ் மதிப்பீடு ரூ. 8.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பிடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **665, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

26) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பழைய மண் அணைக்கும், மனோரஞ்சிதம் சோலைக்கும் இடையில் தடுப்பணை (Check Dam) ரூ. 9,86,70,606/– மதிப்பீட்டில் மூலதன நிதி மானியம் ( Capital Grant Fund) மூலம் அமைப்பதற்கு அரசு ஆணை (நிலை) எண். 117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நநி3) துறை நாள்.20.11.2018 ல் நிர்வாக அனுமதி வழஙகி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை கடிதம் எண். 4/2019 (CCO) 8.1.2019–ல் மனோரஞ்சிதம் அணைக்கும் , பழைய மண் அணைக்கும் இடையில் தடுப்பணை கட்டுவதால் குறைந்த அளவே நீர் சேமிக்க இயலும் என்பதினால் பழைய மண் அணையினை பலப்படுத்தி உயரப்படுத்தினால் கூடுதலாக குடிநீர் தேக்கி வைக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்ணாபொறியியல் கல்லூரியின் ஆலோசனை கடிதம் எண். PMC 024/Civil / CS / 2019 நாள். 18.1.2019–ல் காணும் அண்ணா பொறியியல் கல்லூரி, திண்டுக்கல் அவர்களின் ஆலோசனை கடிதத்தில் பழைய மண் அணைக்கும், மனோரஞ்சிதம் அணைக்கும் இடையில் தடுப்பணை அமைத்தால் 57.25 MLD மட்டுமே குடிநீரை தேக்கி வைக்க இயலும் எனவும், பழைய மண் அணையின் உயர்த்தினை 2 மீட்டர் உயர்த்தினால் கூடுதலாக 155.20 MLD சேமித்து வைக்க இயலும் என்பதினால் பழைய மண் அணையின் உயர்த்தினை 2 மீட்டர் உயர்த்திட பரிந்துரை வழஙகப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிர்வாக அனுமதி வழஙகப்பட்ட அரசு ஆணை (நிலை) எண். 117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நநி3) துறை நாள்.20.11.2018 ல் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள இரண்டு அணைகளுக்குமிடையில் புதியதாக தடுப்பு அணை அமைக்க நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரத் தேவையான தொழில் நுட்ப அனுமதிக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் , மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை கடிதம் எண். 4/2019 (CCO) 8.1.2019 மற்றும் அண்ணாபொறியியல் கல்லூரியின் ஆலோசனை கடிதம் எண். PMC 024/Civil / CS / 2019 நாள். 18.1.2019–ம் தேதிய பரிந்துரையும் ஒரே மாதிரியாக, அதாவது பழைய மண் அணையினை பலப்படுத்தி உயரப்படுத்தி கூடுதல் நீரினை தேக்கி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதால், திருத்திய மதிப்பீடு ரூ. 10.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் நிர்வாக அனுமதி வழஙகப்பட்ட தொகை ரூ. 8.55 கோடி அரசு மானியம் போக மீதத் தொகையினை நகராட்சி பஙகளிப்பு தொகையாக செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: கூடுதல் தொகையினை நகராட்சியின் குடிநீர் கணக்கு நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு நக.எண். 3985/2015/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **666, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

27) கொடைக்கானல் நகராட்சியில் நிர்வாக செலவு, பொது மக்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுத்தல் மற்றும் இதர செலவினஙகள் அதிகரித்து வருவதாலும், நிதி நிலைகள் பின்தங்கிய நிலையில் இருப்பதாலும் ஓரளவு நிதி நிலையினை உயர்த்தும் நோக்கில் நகராட்சி நிர்வாக நலன் கருதி இந்நகராட்சிக்குட்பட்ட துறைவாரி வசூல் செய்யும் இனஙகளில் கீழ்காணும் விபரப்படி கட்டணம் வசூல் மறு நிர்ணயம் செய்து வசூல் செய்யவேண்டியுள்ளது. எனவே, அதற்கான இரசீது புத்தகஙகளை அரசு அங்கீகாரம் பெற்ற கோயம்புத்தூர் அரசு கூட்டுறவு அச்சக நிறுவனத்தில் ஒரு புத்தகத்திற்கு 100 பக்கஙகள் வீதம் கீழ்கண்ட விபரப்படியான இரசீது புத்தகஙகள் அச்சடித்து வாங்கிக் கொள்ளவும், அதற்குண்டான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | இனம் | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் | மாற்றி அமைக்க உத்தேசித்த கட்டணம் | தேவைப்படும் இரசீது புத்தகஙகள் |
|---|---|---|---|---|
| 1 | புருட்டன் வளாக வாகன நிறுத்துமிடம் | | | 1000 ரசீதுகள் கொண்டு 100 புத்தகம் மற்றும் 600 ரசீதுகள் கொண்ட 900 புத்தகம். |
| | கார் (நாள் ஒன்றக்கு) | 25 | 40 | 1000 |
| | வேன் (நாள் ஒன்றக்கு) | 40 | 60 | 1000 |
| | பஸ் (நாள் ஒன்றக்கு) | 40 | 100 | 1000 |
| | | | | |
| 2 | சிறுவர் பூங்கா நுழைவுக் கட்டணம். | | | 1000 ரசீதுகள் கொண்டு 100 புத்தகம் மற்றும் 600 ரசீதுகள் கொண்ட 900 புத்தகம். |
| | சிறியவர் | 3 | 5 | 1000 |
| | பெரியவர் | 3 | 10 | 1000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 3 | படகு சவாரி கட்டணம் | | | 1000 ரசீதுகள் கொண்டு 100 புத்தகம் மற்றும் 600 ரசீதுகள் கொண்ட 900 புத்தகம். |
| | சிறியவர் | 10 | 20 | 1000 |
| | பெரியவர் | 20 | 40 | 1000 |
| | | | | |
| 4 | சாலையோர தற்காலிக தரை கடை | | | 600 ரசீதுகள் கொண்ட 100 புத்தகம். |
| | சிறப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு | இல்லை | 1500 | 100 |
| 5 | நகராட்சி பகுதிகளில் சாலையோரம் நிறுத்தப்படும் சுற்றுலா வாகன நிறுத்தக் கட்டணம் நாள் ஒன்றுக்கு | | | 600 ரசீதுகள் கொண்ட 100 புத்தகம். |
| | கார் (நாள் ஒன்றக்கு) | இல்லை | 40 | 100 |
| | வேன் (நாள் ஒன்றக்கு) | இல்லை | 60 | 100 |
| | பஸ் (நாள் ஒன்றக்கு) | இல்லை | 100 | 100 |

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **667, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

28) கொடைக்கானல் நகராட்சியில் பொது சுகாதார பிரிவு தனியார் ஒப்பந்த பணியாளர்கள் வருகைப் பதிவேட்டினை Bio-Metric முறையில் கண்காணித்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29828/2018/ஜே3, நாள். 7.8.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மூலம் துப்புரவு பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, பொது சுகாதார பிரிவு தனியார் ஒப்பந்த பணியாளர்களின் வருகைப் பதிவேட்டினை Bio-Metric முறையில் கண்காணித்திட மதிப்பீடு ரூ. 1.10 இலட்சத்திற்கு பொது நிதியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பிடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **668, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

29) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண்.47, நாள்.26.06.2003 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.184 பாகம்–III, பிரிவு எண்.1 (எ) நாள்.26.06.2003ல் விளம்பர பலகைகள் அனுமதி விளம்பரவரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003ல் திருத்தங்கள் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) துறை அரசாணை எண்.15,16 மற்றும் 17, நாள்.31.01.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் பாகம்–III, பிரிவு 1 (a) ல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விளம்பர பலகை உரிமம் வழங்குதல் வசூல் செய்தல் விதிகள் 2003 என திருத்தம் செய்யப்பட்டு நகரில் உள்ள ARTERIAL ROADS மற்றும் பிரதான சாலைகள், தெருக்கள் மற்றும் இதரப் பகுதிகளில் அமையும் விளம்பரத்திற்கு தக்கவாறும், இடத்திற்கு தக்கவாறும் மற்றும் விளம்பர பலகை அமையும் சாலையின் அகலத்திற்கு தக்கவாறு வைப்பதற்கான விதிமுறைகள் தொடர்பாக வரப்பெற்றுள்ள அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றத்தில் பதிவு செய்யலாம்.

2) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள அறிவுரைகள் மற்றும் விதிமுறைகளின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் தனியார்களுக்குப் பாத்தியப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிலத்தில் வைக்கப்படும் விளம்பரப் பலகைகள், தட்டிகள், பேனர்கள் மற்றும் சுவர் விளம்பரங்கள் போன்றவற்றை நிறுவவும் அவற்றை நடைமுறைப்படுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **669, நாள். 28.08.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.